# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2012 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்

---

*(2012 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

2012, பெப்புருவரி மாதம் 17 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 9.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2012 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்டம்**

[2012 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஒ. 37/2011

**2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2012 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு (திருத்தச்) சட்டம் எனக் குறிப்பீடு செய்யப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- 2011 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் "அறவீட்டை அல்லது தீர்வையை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அறவீட்டை, விதிப்பனவை, தீர்வையை" அல்லது தண்டம் என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) உட்பிரிவில், "அவர்கள் உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் இளைப்பாறிய நீதிபதிகள், வரி விதித்தல் அத்துடன் நிதி மற்றும் சட்டம் என்ற துறைகளில் பரந்த அறிவுள்ளவர்களும் பிரபல்யம் பெற்றுள்ளவர்களுமான ஆட்களிலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இவர்களுள் ஒருவர் உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் இளைப்பாறிய நீதிபதிகளிடையேயிருந்தும் ஏனைய இரண்டு உறுப்பினர்கள் வரிவிதித்தல் அத்துடன் நிதி மற்றும் சட்டம் என்ற துறைகளில் பரந்த அறிவுள்ளவர்களும் பிரபல்யம் பெற்றுள்ளவர்களுமான ஆட்களிடையேயிருந்தும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

2-PL 006437 -1115 (2011/12)

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை சேர்ப்பதன் மூலமும் :-

"(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் எவரேனும் உறுப்பினர் சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாதிருத்தல் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் இச்சட்டத்தின்கீழ் அவரது பணிகளை நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து, அமைச்சர் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை கருத்திற்கொண்டு, அவரது இடத்திற்கு வேறொரு உறுப்பினரை நியமிக்கலாம். அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் அவர் எந்த உறுப்பினரை அடுத்துறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்தின் காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "குழாத்தின் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஆணைக்குழுவின் விசாரிப்புகளுக்கு வருகைதருவதற்கும் அத்தகைய ஆணைக்குழுவின் முன்னருள்ள மேன்முறையீட்டு நடவடிக்கைகளையும் புலனாய்வுகளையும் (எவையுமிருப்பின்) தொடர்ந்து நடாத்துவதற்கும் உதவுவதற்கும் அமைச்சரினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குழாத்தின் இரண்டிற்குக் குறையாத உறுப்பினர்கள் ஆணைக்குழுவின் விசாரிப்புகளுக்கு வருகை தருவதற்கும் அத்தகைய ஆணைக்குழுவின் முன்னருள்ள மேன்முறையீட்டு நடவடிக்கைகளையும் புலனாய்வுகளையும் (எவையுமிருப்பின்) தொடர்ந்து நடாத்துவதற்கும் உதவுவதற்கும் ஆணைக்குழுவால்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்-

(அ) “உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி நியமிக்கப்பட்ட உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் (இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தில், “ஆணையாளர் தலைமையதிபதி” எனக் குறிப்பீடு செய்யப்படுவார்.” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) “அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட” என்னும் சொற்களுக்கும், “அறவீட்டை அல்லது தீர்வையை” என்னும் சொற்களுக்கும் பதிலாக, “முறையே அட்டவணை I மற்றும் அட்டவணை II என்பவற்றின் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட” என்னும் சொற்களையும், “அறவீட்டை, விதிப்பனவை தீர்வையை அல்லது தண்டத்தை” என்னும் சொற்களையும் இடுவதன் மூலமும் ; அத்துடன்

(இ) அவ்வுட்பிரிவிற்கான காப்பு வாசகத்தில், “வரியாக” என்னும் சொல்லுக்குப் பதிலாக, “வரியாக, அறவீடாக, விதிப்பனவாக தீர்வையாக அல்லது தண்டமாக” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், “இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “இச்சட்டத்திற்கான அட்டவணை I மற்றும் அட்டவணை II என்பவற்றின் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்கம் செய்வதன் மூலமும் ; அத்துடன்

(4) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பை நீக்கம்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்ட தீர்மானத்திற்கெதிராக ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்வதற்கான உரிமை."

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கை முறை.

8. (1) ஏதேனும் வரி, அறவீடு, விதிப்பனவு தீர்வை அல்லது தண்டம் விதிக்கப்பட்டமை தொடர்பிலான ஏதேனும் விடயம் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியின் தீர்மானத்தால் இடருற்ற ஆளொருவர், ஆணையாளர் தலைமையதிபதியின் தீர்மானத்தில் அவரால் குறிப்பிடப்பட்ட காரணங்களையிட்டு திருப்தியுறாவிடில், அத்தகைய தீர்மானத்தின் திகதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் அதனின்று ஆணைக்குழுவுக்கு மேன்முறையீடு செய்யலாம். ஆணைக்குழு அதன் பொருட்டு ஆணைக்குழுவால் காலத்துக்குக் காலம் ஆக்கப்படக்கூடியவாறான அத்தகைய விதிகளுக்கிணங்க அத்தகைய மேன்முறையீட்டை விசாரித்துத் தீர்மானித்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் மேன்முறையீடொன்றைச் சமர்ப்பிக்கும் முறையும் படிவமும் அதுதொடர்பில் செலுத்தப்படற்பாலதான கட்டணங்களும், எவையுமிருப்பின் அதன் பொருட்டு ஆக்கப்பட்ட விதிகளால் ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டவாறாதல் வேண்டும்.".

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) "அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அட்டவணை I மற்றும் அட்டவணை II என்பவற்றின் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "அட்டவணை I மற்றும் அட்டவணை II என்பவற்றின் நிரை I இல் குறித்துரைக்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) "முடிபை" என்னும் சொல்லுக்குப் பதிலாக அது காணப்படும் இடங்களிலெல்லாம் "தீர்மானத்தை" என்னும் சொல்லை இடுவதன்மூலமும் ;

(2) "தேதியிலிருந்து நூற்றியெண்பது நாட்களினுள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேதியிலிருந்து இருநூற்றி எழுபது நாட்களினுள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(3) அப்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "கைமாற்றப்பட்ட தேதியிலிருந்து நூற்றியெண்பது நாட்களினுள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணைக்குழு அதன் அமர்வுகளைத் தொடங்கவேண்டிய தேதியிலிருந்து பன்னிரெண்டு மாதங்களுக்குள்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**8**. பன்னிரெண்டாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 12அ என்னும் பிரிவு என்றாற் போன்று பயனுறுதலும் வேண்டும் :-

"விதிகள்.

12அ. (1) ஆணைக்குழு இச்சட்டத்தின்கீழ் எந்தக் கருமங்கள் தொடர்பில் விதிகள் ஆக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த எல்லா அல்லது எவையேனும் கருமங்கள் தொடர்பில் விதிகளை ஆக்கலாம்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழ் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட எல்லா விதிகளும் அமைச்சரால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, "அட்டவணையின்" என்னும் சொல் அப்பிரிவில் தோன்றும் இடங்களிலெல்லாம் அதற்குப் பதிலாக, "அட்டவணை I இன் " என்னும் சொல்லையும் எண்ணையும் இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**10**. பதின்மூன்றாம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுஉட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 13அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-

"குறித்தசில சட்டங்களின்கீழ் மீளாய்வுச் சபையின் முன்னிலையில் முடிவுறா திருக்கும் மேன்முறை யீடுகள் அச்சட்டங்களின் ஏற்பாடுகளில்

13அ. இச்சட்டம் தொடங்கும் தேதியன்றுள்ளவாறு இச்சட்டத்திற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட எவையேனும் சட்டவாக்கங்களின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி அந்தந்த மீளாய்வு சபையின் அல்லது மீளாய்வு சபைகளின் முன்னிலையில் முடிவுறாதிருக்கும் ஏதேனும் மேன்முறையீடு இச்சட்டத்திற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்கள் அத்தகைய ஏற்பாடுகளின் குறித்துரைக்கப்பட்ட

குறித்துரைக்கப்பட்டவாறான வேறுபட்ட வரிவிதிக்கத்தகு காலப் பகுதிகளுக்கு ஏற்புடையனவாதல்.

வாறான வேறுபட்ட வரிவிதிக்கத்தகு காலப் பகுதிகளுக்கு ஏற்புடையதாதல் என்ற நிகழ்வு எவ்வாறிருப்பினும் ஆணைக்குழுவுக்குக் கைமாற்றப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணையைத் திருத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அட்டவணையை "அட்டவணை I" என மீள இலக்கமிடுவதன்மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட அட்டவணை I இன் விடயம் 3 என்பதற்கான நிரை II ஐ நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் பிரிவுகள் 166, 167, 168, 169 அத்துடன் 170 என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய "நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு.".

(3) மீள இலக்கமிடப்பட்ட அட்டவணை I இன் விடயம் 3 என்பதற்கான நிரை III ஐ நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

"நாட்டைக் கட்டியெழுப்புதல் வரிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு "மேன்முறையீடுகள் தொடர்பில் அத்தியாயம் XXII" என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "பிரிவுகள் 166, 167, 168 அத்துடன் 169 என்பவற்றைத் தவிர மேன்முறையீடுகள் தொடர்பில் அத்தியாயம் XXII என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.".

(4) மீள இலக்கமிடப்பட்ட அட்டவணை I இன் விடயம் 4 என்பதன் நிரை II ஐ நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

''2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் பிரிவுகள் 166, 167, 168, 169 அத்துடன் 170 என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டத்தின் பிரிவு 11.''.

(5) மீள இலக்கமிடப்பட்ட அட்டவணை I இன் 4 ஆம் விடயத்திற்கான நிரை III ஐ நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

''பொருளாதார சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு ''முறையே மேன்முறையீடுகள் தொடர்பில்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''பிரிவுகள் 166, 167, 168 அத்துடன் 169 என்பவற்றின் ஏற்பாடுகளைத் தவிர ''முறையே மேன் முறையீடுகள் தொடர்பில்'' என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலமும் ;

பிரிவு 11

(6) அதன் 4 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும் :-

| *நிரை I* | *நிரை II* | *நிரை III* |
|---|---|---|
| 5. 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத்தீர்வை, (விசேட ஏற்பாடுகள் சட்டம்) | | முத்திரைத்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 11 ஆம் பிரிவு ''வரிமதிப்பீடு, மேன்முறையீடுகள், மேன்முறையீடுகளின் தீர்மானம் என்பன தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XVIII முதல் XXIV வரையிலான அத்தியாயங்கள்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''மீளாய்வுச் சபைக்கான மேன்முறையீடுகள் தொடர்பில் பிரிவுகள் 166, 167, 168 அத்துடன் 169 என்பவற்றைத் தவிர வரிமதிப்பீடு, மேன்முறையீடுகள், மேன் முறையீடுகளின் தீர்மானம் என்பன தொடர்பில் உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் XVIII முதல் XXIV வரையிலான அத்தியாயங்கள்'' என்னும் சொற்களை இடுவதன்மூலமும். |

முதன்மைச் சட்டவாக்கத்திற்கு அட்டவணை II ஐ உட்புகுத்தல்.

**12.** பின்வரும் புதிய அட்டவணை முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணை I ஐ உடனடுத்துப் பின்னர் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் அட்டவணை II ஆக பயனுறுதலும் வேண்டும் :-

"**அட்டவணை** II

*சட்டவாக்கத்தின் பெயர்*

1. *1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டம்*
2. *1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் வரிச் சட்டம்.".*

***13.*** இச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், எல்லா நோக்கங்களுக்காகவும் 2011, மாச்சு 31 ஆந் தேதியன்று பயனுக்கு வந்துள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும். *கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.*

***14.*** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்